சொற்பொழிவுகள் ஆரம்பித்தன. குமாரி செல்லத்தாய், போதனுமுறைப் பள்ளியில் தன் அனுபவம் பற்றிப் பேசினார். முதல் வருடம், விஷயம் முறைபற்றி விவரம் தெரியாமல் திண்டாடியதையும், இவ்வருடத்திற்குள் அதிகம் முன்னேறியிருப்பதையும், கண்காட்சி சாலையில் பங்கெடுக்க திறமை பெற்றதோடு, மாதிரிப் பாடம் எடுக்கவும் பழக்கப்பட்டுவிட்டதை எடுத்துக் கூறினார்.

குமாரி அந்தோணியம்மாள் 'கல்வியின் கண்காட்சி' என்பது பற்றிப் பேசினார். அதில் கண்காட்சி தயாரிக்கும் ஆசிரியர், ஆசிரிய மாணவர் அடையும் அனுகூலங்களையும், ஆசிரியருக்கு அதில் இருக்கவேண்டிய பொறுப்பையும் பற்றி எடுத்துக் கூறியதோடு, கிராமங்களில் பல பாடசாலைகள் வைக்கும் கண்காட்சியைப் பற்றியும், அதில் போட்டியுடன் பலர் உழைப்பதினால் அடையும் பயன்பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்.

குமாரி பிரான்ஸிஸ்கா, எப்படி ஊமைப் பிள்ளைகள், சமுதாயத்தில் பிறருக்கு ஒத்தபடியான விதத்தில் நடந்துகொள்ளும்படி உதவுவது என்ற பிரச்னைபற்றிப் பேசினர். மாணவரைப் புரிந்துகொண்டு, அவர்களை நேசித்துப் போதிப்பதே கல்வியின் இரகசியம். இதை இவர் பேச்சு வெட்டவெளியாக்கியது. ஊமைப் பிள்ளைகள், பிறர் மத்தியில் நாசூக்காக நடந்துகொள்ளப் பயிற்சித்தல், உதட்டின் அசைவால் கருத்தைக் கிரகித்தல், கண்டு, தொட்டு அறிய இயலாத பொருட்களைப்பற்றிய அறிவைப் புகுத்தும் விதம் என்பதுபற்றித் தனது சொந்த அனுபவத்திலிருந்து எடுத்துக்காட்டுகளுடன் விவரித்தார்.

பேச்சின் இறுதியில், அதிசிரேஷ்ட தாயாரவர்களை வரவேற்ற விதத்தைக் கூறினர். முதல் நாள், கண்தெரியாத பிள்ளைகள், ஊமைப் பிள்ளைகள், ஆசிரியர் அனைவரும் 2 வரிசையாய் நின்றுகொண்டு அவர்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்க, திடீரென்று 'கார்' நுழைந்தது. அனைவரும் கைதட்ட ஆரம்பித்தனர். ஆனால், உள்ளே இருந்தது யார்? கார் ஓட்டுபவர் மட்டுமே. இரண்டாம் முறை, புகைவண்டி வந்ததை அறிந்த பின்னரே வரிசை நின்றனர். இம்முறையும் ஏமாற்றம். தபால்காரர், நாளை வருவார்கள் என்ற செய்தியை அறிவிக்க வந்தார். இறுதியாய் மறுதினம் வந்தபோது கரகோஷம் உண்மையானது. அவர்கள் ஆசிரியர் அனைவர்க்கும் கைக்குட்டை கொடுத்ததாகக் கூறி, தனக்குக் கிடைத்ததைப் பெருமையுடன் எடுத்துக் காட்டி சிரிவில்லிக்கு, அதிசிரேஷ்ட தாயாரவர்கள் அன்பு ஆசீர் அளிப்பதாகச் சொன்னதையும் தெரிவித்தார். இதற்கிடையில், குமாரி மும்தாஜ், "எனக்குப் பாளையங்கோட்டையில் கொடுத்த கைக்குட்டை இதோ" என்று போட்டா போட்டியில் காட்டினர்.

அடுத்து குமாரி தனபதி, தனது ஓர் சில மாதங்களில் அடைந்த சிறு அனுபவம் குறித்துப் பேசினர். நடுத்தர வகுப்புகட்கு ஆங்கில போதனை; தன் மாணவரை ஆங்கிலத்தில் பேச வைக்கவேண்டும் என்ற ஆவலில், தான் முனைந்து எக்கேள்வியை ஆங்கிலத்தில் கேட்டாலும், 'yes', 'no' என்ற பதிலே வந்ததென்றால் எப்படி? தற்போது மாணவர் ஆங்கிலத்தில் பேச முயற்சி செய்கின்றனர் என்ற திருப்தி கொண்டார். பள்ளி அனுபவத்தோடு விடுதி அனுபவம் கொஞ்சம். இவ்வாண்டு பரீட்சை எழுதிய ஆசிரியைகள் பெரும்பாலோர் தேர்வின் முடிவை, பயந்து கலங்கிய உள்ளத்தோடு எதிர்

பார்த்துத் தவித்தனர். இறுதியில் அனைவர்க்கும் வெற்றி. வெற்றி முழக்கத்தில் தேநீர் விருந்துகள் !

ஆசிரிய அனுபவங்களை மட்டும் பேசிக் கொண்டிருந்தால் மாணவ அனுபவமுடைய ஆசிரியையான எனக்குப் பங்கு எங்கே என்ற உரிமையில் ஸ்ரீமதி ரகுபதி, தமது தற்கால புதிய மாணவ அனுபவம்பற்றிக் கூற முன் வந்தார். மீண்டும் மாணவ ராயிருப்பது கடினம். ஆயினும் ஆசிரிய அனுபவம் இங்கே உதவி புரிகிறது. சுதந்தரப் போராட்ட நூற்றாண்டு விழாவின் போது மதுரை ஜில்லாவின் கலாசாலைகட்கு இடையே நடந்த கட்டுரைப் போட்டியில் ஸ்ரீமதி ரகுபதி தங்கப் பதக்கம் பெற்றார் என்பது, நம் பாராட்டுக்குரிய பெருமையன்றோ! ஸ்ரீமதி ரகுபதி பேச்சிடையே குமாரி ஜோன் வந்து தனது சொற்பொழிவைத் துவக்கினார். இப்போது குளச்சல் மடத்தில் பெரிய தாயாராய் இருப்பவர் யார் தெரியுமா ? 1930 முதல் சமீப காலம் வரை நம் மடத்திலே இருந்து, அரும் சேவை ஆற்றிவந்த நமது அருமைப் பெர்த்தாத் தாயார்தான். பென்னைச் சரிசெய்ய வேண்டுமா ? மைப்புட்டியைத் திறக்கவேண்டுமா ? சாவி துலைந்து போன பூட்டைத் திறக்கவா ? மாதிரிப் பாடத்துக் குரிய உபகாரணம் செய்ய வேண்டுமா ? — எதற்கும் தயார் (**ever ready**) என்ற பட்டப் பெயரோடு மாணவியர் அன்னாரை அழைத்துவந்ததை ஞாபகப்படுத்தினார். அவர்களை இக்கூட் டம் எதிர் பார்த்தது, நேரில் கண்டு நன்றி நவில. ஆயினும் நாம் விரும்புவதெல்லாம் நடந்துவிடுகிறதா இவ்வுலகிலே.

இறுதியாய் பிரின்ஸிப்பால் மக்களைக் கண்ட ஆனந்தத் திலே திளைத்துப் பேசினார். வராதவர் அனுப்பிய வாழ்த்துக் களை எடுத்துரைத்தார். படிக்கும் காலத்தில் கேட்ட சனிக் கிழமை புத்தி இனி அவசியப்படாதென்று கருதுவார் போல, கூட்டத்தைத் தமது வெகு சுருக்கமான பேச்சுடன் முடித்தார். பின்பு தேசீய கீதம் பாடப்பட்டது. (பழைய மாணவர் தினம்போன்ற பள்ளி விசேஷ தினங்களில் நடைபெறும் கூட்ட இறுதியில் தேசீய கீதம் பாடலாம்.)

Sec. Juniors வகுப்பறையில் கல்யாணப் பத்திரிகைகள் காட்சியளித்தன. அருகே ஒவ்வொரு வருடமும் எடுக்கப் பட்ட இறுதி வகுப்புப் புகைப்படங்கள், பல்வேறு சிறு படங் கள், பழைய மாணவரது குடும்பப் படங்கள், இவை அமைந்

துள்ள நமது பள்ளிப் புகைப்படப் புத்தகங்கள், சதா ஓய்வின்றிப் பக்கம் புரட்டப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்தன. வெளியே பழைய மாணவர் போகுமுன் அவரவர் கட்டணத்தைச் செலுத்தினர். ஒரு சிலர் தமது பழைய பாக்கியையும் தாராளத்துடன் கட்டினர்.

அதே சமயம் பிரின்ஸிப்பாலுடன் சில மாணவர் சேர்ந்து அதிர்ஷ்டப் பரிசுத் தட்ட ஆரம்பித்தனர். ஆனால் ஏற்கனவே சீட்டுக்கள் விற்கப்படுவது எவ்வளவு அவசியம் என்று தெரிந்துவிட்டது. வெகு சீக்கிரத்தில் பரிசுகள் பல மீதப்பட்டன. அவற்றைப் பொருட்காட்சியின் போது வைக்கும் அதிர்ஷ்டப் பரிசுக்கு வைத்துக் கொண்டால் அனதைச் சிறுவருக்காவது உதவும் என்று கோரி பத்திரமாய் வைத்துள்ளோம். அதிர்ஷ்டத்தைச் சோதித்த ஆனந்தத்தில் மீண்டும் ஓர் முறை, தமது சாப்பாட்டு விடுதியில் தேநீர் விருந்துக்குச் சென்றனர்.

நாடகம் துவக்க நேரமாகப் போகிறது, என்று அறிவிக்கப்பட்டதுதான் தாமதம், தற்போதைய நம் மாணவர் யாவரும் அமைதியாக மாடியறையின் படிகளை நிரப்பிவிட்டனர். இடையிடையே பழைய மாணவியர். சற்றுக் கழித்து, பழைய மாணவர் திரண்டு வந்து நின்றபோது இடமில்லை என்ற பிரச்னை கிளம்பியது. முந்திய தினம் நாடக ஒத்திகையைக் கண்ட பிறகுங்கூட, அழைக்கப்படாமலே வந்தமர்ந்திருந்த நம் புதிய மாணவர் சற்று தலை குனிந்தபடியே தம்திருக்கை விட்டு, எழுந்தோடிவிட்டனர் கீழே. நாடகமும் குறித்த நேரத்திலே ஆரம்பித்தது.

நமது உயர்தர ஆரம்பப்பாடசாலைச் சிறுமியாது "சஹாராப் பாலைவனச் சிறுவன்", பாட்டு, ஜல் ஜல் நடனம், நேர்த்தி. திருஞானசம்பந்தர் உயர்தர ஆரம்பப் பள்ளிச் சிறுமியர் நடித்த 'மேரி மதலேனா' என்ற அழகிய நடனம், யாவர் மனதையும் பரவசப்படுத்தியது. இதை நடத்த அனுமதித்த பள்ளிப் பெரியாருக்கும், ஆசிரியை ஸ்ரீமதி விசாலாட்சி அம்மாளுக்கும், நமது வந்தனம் உரித்தாகுக ! 'துரோகி பெற்ற தண்டனை' என்பது நமது மாணவர் நடித்த நாடகம். முந்தின தினம் தொண்டை கட்டிக்கொண்டது கதாநாயகனுக்கு. — அலமேலு. ஆயினும் திறம்பட நடித்தாள். இரு வேந்தராம்

குமாரியும், ரெங்காவும் வேந்தராகவே தோன்றினர். இரவில் கூடாரத்தினருகே, மங்கலான ஒளியிலே நடைபெறுவதாகக் காட்டப்பட்ட காட்சிப் பொருத்தமாய் அமைந்திருந்தது. இடையே கழிகவாத்து ஒன்று, மூன்று வண்ணங்களிலிருந்தது. வேடிக்கை நடிப்புக்கள் இரண்டு அனைவரையும் சிரித்துக் குலுங்க வைத்தன. இறுதியாய் இந்திய அரசியாம் தேவ அன்னையின் முன் தாமரை ஏந்தியபடி நளினமான நடனம் ஒன்று அனைவருக்கும் அமைதியான ஆனந்தத்தைத் தந்தது.

யாவும் முடிந்து கீழே இறங்கிச் சாப்பிடச் சென்றால், பிந்தியவர்க்குச் சாப்பிட வெளிச்சம் இல்லை. திடீரென்று எங்கும் இருள் மயம். மின்சாரம் மறுத்துவிட்டது. ஆனால் மாணவர்கள் கலீரென்ற ஒலியிலே எழுந்த ஒலி எங்கே சென்றது?


கவனியுங்கள் ஓர் நிமிடம்!

உங்கள் குடும்ப புகைப்படம் அனுப்பிவிட்டீர்களா? உங்கள் திருமண தினத்தன்று எடுத்த படம், உங்கள் குழந்தைகளின் படங்கள் நம் பள்ளி ஆல்பத்தில் இடம் பெறவேண்டாமா? கன்னியராவோர் தமது திருவுடையிலே படம் எடுக்கும்போது, ஓர் பிரதியை மறவாது அனுப்புவார்களா? ஆயுள் சந்தா கட்ட ஒரு சிலர் ஒப்புக்கொண்டனர். முதன் முதலில் கட்டியவர் குமாரி மும்தாஜ். திருமண அழைப்புடன் உங்கள் சரியான பெயர், எண், படித்த இறுதி வருடம், மணமான பிறகு மாறும் விலாசம் இவை விவரமாய்த் தரப்பட்டால் நலம். சில பழைய மாணவர் சங்க அழைப்பிதழ் திரும்பின. விலாசம் மாறிய பின், விலாசம் கொடுக்காததின் பலன் இது.


நித்தியத்திற்கும் இளைப்பாறுவார்களாக!

Ele. Gr. M. பவுலின், ஜனவரியிலிருந்து பலவீனமாகிக் கொண்டே வந்தாள். பலவீனத்திலும் வகுப்பிலே அமைதி, பாடத்திலே கவனம், பெற்றோர் தனக்காக செலவிடுவதில் அனுதாபம். அன்று மே மாதம் முதல் சனி. தேவதாயின் நாள். மதுரைக்கு அழைத்துச் செல்ல யாவும் தயார். ஆனால் பரலோக அன்னை, தமது விண்ணிற்கே அழைத்துக்கொள்ள வந்துவிட்டாள். பெற்றோர், சகோதர, சகோதரி அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

Sec. Gr. '50. ஜானகி, நடிக்கும் திறமை மிக்க மாணவி. இந்த சுதந்திரப் போராட்ட நூற்றாண்டு வைபவத்தின்போது, உல



Sec. Seniors on excursion at Manimuthar



கப் போராட்டத்தை வெறுத்து நித்திய இளைப்பாற்றிக்குப் பறந்து விட்டாள். பிரசவித்து விட்டுச் சென்றுள் சிறு பாலகனை! அவளது துணைவர்க்கு எம் அனைவரது வருத்தத்தையும் இத்துடன் தெரிவிக்கிறோம்.

நம் பிரின்ஸிப்பால் 52-53ல் பெல்ஜியம் சென்று தம் அருமை அன்னையைத் தரிசித்து வந்தார் அல்லவா? இந்த மே மாதம், பிரின்ஸிப்பால் அவர்களது அன்னை, தமது 86-வது பிராயத்தில் கர்த்தரில் நித்திரை அடைந்தார். அமரிக்கையான மரணம். வயது 86 ஆயினும், அன்னையின் அன்புக்கு வயது என ஒன்றில்லையே! அனைவரும் இவர்கள் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டுவதுடன், இவர்களது மக்களாம் பிரின்ஸிப்பால், ஓர் தம்பி இவர்கட்கு, ஆண்டவன் மன ஆறுதல் அளிக்கவும் ஜெபிப்போமாக!

சேசுவின் திரு இருதய போதனுமுறை பாடசாலை அறிக்கை

ஆகஸ்டு 1956—'57

ஆசிரியர் குழு

ஆசிரியர் குழுவில் இரு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குமாரி **Juliet Fdo B.A.B.T.**விற்குப் பதிலாக ஸ்ரீமதி **Saradha** அவர்களும் ஆசிரியர் குழாமில் வந்துள்ளனர். குமாரி **Juliet Fdo B. A. B. T.** இப்பொழுது அடைக்கலாபுரம் போதனு முறைப் பாடசாலையின் ஆசிரியர் குழாமில் உள்ளார்.

பரீட்சை முடிவுகள்

கடவுளருளால் இவ்வருடம் பரீட்சையில் நல்ல வெற்றி கிடைத்துள்ளது. **Sec. Gr**-ல் 42 மாணவிகளுக்கு 40 மாணவி கள் வெற்றி பெற்றுள்ளனர். அதில் 14 மாணவிகள் முதல் வகுப்புக்கள். **Hr. Gr**-ல் 45க்கு 42 மாணவிகள் தேர்ச்சி அடைந்துள்ளனர். அதில் 22 முதல் வகுப்புக்கள். ஒரு வருட மும் இல்லாத அமோக வெற்றி என்பதை பெருமையோடு தெரி விக்கிறோம். பவுலின் என்னும் மாணவி கடைசி இரு **terms** மிகவும் சுகவீனமாயிருந்தாள். எல்லா பரீட்சைகளும் எழுத முயற்சித்தும் அவளால் முதல் நாள் பரீட்சை மட்டும்தான் எழுத முடிந்தது. எழுதிய தமிழ் பரீட்சையில் தான் தேறியதை அறிய அவள் உயிருடனில்லை என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மாணவிகளின் எண்ணிக்கை

ஏப்ரல் மாதத்திலேயே மனுக்கள் 600க்கு மிஞ்சிவிட்டன. **Sec. Gr**-க்கு 42 பொறுக்கப்பட்டதில் ஒரு பெண் கல்லூரியில் சேருவதற்காக விட்டுச் சென்றுள். உடனே **waiting list**லுள்ள மாணவி வருவிக்கப்பட்டாள். **Ele. Gr**-க்கு 46 பேர்கள் பொறுக் கப்பட்டு வந்துள்ளனர்,

இட வசதி

இந்த வருடம் நிறைய இடவசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஹைஸ்கூலில் நடுவில் சேசுவின் திரு இருதய சுரூபம் வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கொண்டாட்டத்திற்குச் சென்றிருந்தார்கள். **Training School** மாணவிகள் சுற்றியிருந்து வகுப்பு எடுக்கும் கிணறு மூடப்பட்டு கைக்குழாய் வைக்கப்பட்டுள்ளது. குழாய்த் தண்ணீர் வசதி வைக்கப்பட்டுள்ளது. வெள்ளையடிக்கப்பட்டு பள்ளியின் ஒவ்வொரு மூலையும் மிக அழகாகத் தோற்றமளிக்கின்றது.

Orphanageக்கு அதிகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பழைய **Orphanage**க்கு அருகில் புது **kitchen**களும், நன்கு அமைக்கப்பட்ட **box room**களும் கட்டப்பட்டுள்ளன. பழைய கக்கூசுகள் இடிக்கப்பட்டு **town school**ல் உள்ளதுபோல் புது மாதிரி கக்கூசுகள் அமைக்கப்பட்டுள்ளன. **Boarders**ஐ விட **Orphans** நல்ல வசதி அடைந்துள்ளனர். புது **Orphanage** கட்டிடத்திற்கு நம் மதிப்பிற்குரிய **Provincial Mother** அவர்களால் அஸ்திவாரக் கல் **Feb.** 24-ந் தேதி இடப்பட்டது. ஒரு வருட காலத்திற்குள் **Orphans** அதில் குடியேறுவார்கள்.

முடிவுப்பயிற்சி முகாம்

முதல் தடவையாக நம் ஆசிரியர் குழாமிலேயே ஒருவராகிய குமாரி **Juliet Fdo B. A. B. T.** அவர்களால் **Secondary Seniors**க்கு ஜனவரி 8 முதல் 17 வரை குடிமைப்பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. மதுரைக்கு உல்லாசப் பிரயாணம் சென்றனர். முகாம் முடியுமுன் ஒரு கண்காட்சி வைத்தனர். முகாம் முடிவில் நடந்த ஆடல், பாடல் நிகழ்ச்சிகளுக்கு சங்கைக்குரிய பங்கு சுவாமிகள் தலைமை வகித்தனர். **C. M. S. School**லில் இருந்து **Sri. Jothimani** அவர்கள் பேசினார்கள்.

உல்லாசப் பிரயாணம்

வழக்கம்போல் தூரத்திலுள்ள இடங்களைப் பற்றிப் பேசினாலும், ஆசைப்பட்டாலும், பணச் செலவை முன்னிட்டு அவை கைவிடப்பட்டன. **Secondary Grade Seniors** இரு குழுக்களாகப் பிரிந்து பெரிய குழு **Rev. Mother Clet, Rev. Mother Caritas** தலைமையில் மணிமுத்தாறு திட்டம், பாபநாசம் முதலியவற்றைப் பார்த்துவிட்டு குற்றாலத்தில் 2-வது குழுவுடன் வந்து சேர்ந்து கொண்டனர், உல்லாசப் பிரயாணம்

வெற்றிகரமாக முடிய உதவிய **Sri Pandian** அவர்களுக்கும், மணிமுத்தாறு காண உதவிய **Sri. Soares** அவர்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

Higher Grade மாணவிகளும் **Rev. Mother Maurice, Rev. Mother Monnica, Rev. Mother Euphemie**, முதலியவர்களுடன் குற்றாலம் சென்றனர். நம் பள்ளி பழைய மாணவி குமாரி **G. Therese**, மதுரையிலிருந்து இங்கு வந்து உல்லாசப் பிரயாணத்தில் கலந்து கொண்டார். தான் மிகவும் சந்தோஷப் பட்டதாகவும் அதற்கு நன்றி செலுத்தியும் கடிதம் எழுதியுள்ளார்.

இந்த இரு உல்லாசப் பிரயாணங்களையும் தவிர **Sec. Juniors** ஐயனார் **falls**க்குச் சென்றனர். தாங்களே சமைத்து அருந்தினார்கள். திரும்பும்போது ராஜபாளையத்தில் **Mill**, புது லைப்ரரி முதலியவற்றைப் பார்த்தனர். **Higher Grade Seniors** புதுப்பட்டிக்கு **R. S. P.** சம்பந்தமாகச் சென்றனர். நிறையப் பள்ளிகள், மாதர் நல இலாகா, பஞ்சாயத்து போர்டு முதலியவற்றைப் பார்த்து விட்டு வந்தனர். பக்கத்திலுள்ள பல இடங்களுக்கும் உலாவச் சென்றனர்.

விளையாட்டு

Nov. 30ந் தேதியன்று **Training School Students** விளையாடிய **Sports**க்கு நம் பிரின்ஸிப்பால் மதர் பரிசுகள் வழங்கினார்கள். **High School** உடன் நடத்திய **Net ball match**ல் **High School** வெற்றி பெற்றது. **Intramurals:- Secondary Grade Throw ball** விளையாடினார்கள். **Juniors** வெற்றி பெற்றனர். **Higher Grade** விளையாடிய **Captain ball**ல் **Seniors** வெற்றி பெற்றனர்.

புறவினைத் தொழில்கள்

தோட்ட வேலை, தேனீ வளர்த்தல், சமைத்தல், தையல் மிஷினில் தைத்தல் முதலியன **Secondary Students**ன் முக்கியமான செய்தொழில்கள். **Rev. Mother Clet** அவர்களால் இவைகளில் பயிற்சி பெறுகிறார்கள். **Higher Grades**க்கு தோட்ட வேலை, இஷ்டமானாலும் தையல் வேலையிலேயே விருப்பம் அதிகம். அனுபவ வேலைகள் அவர்களுடைய நேரத்தின் முக்கால் வாசியை எடுத்துக் கொள்வதால் மீதி நேரத்தில் மேஜை விரிப்பு, பை முதலியன செய்கிறார்கள்.

பொதுக்கூட்டங்களும் பார்வையாளர்களின் வரவும்

Rev. Mother Superior அவர்கள் குடியரசு தினத்தன்று கொடியேற்றினார்கள். நம் மாணவிகளில் சிலர் சிவகாசி சென்று **Police Reserve Ground**ல் கொடியேற்றத்திற்குத் தேசிய கீதம் பாடினார்கள். இந்த வருடம் விசேஷமாக குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. மற்றொரு முறை தங்களுடைய சங்கீதத் திறமையை வெளியிட நம் மாணவிகள் சந்தர்ப்பம் பெற்றனர். பாப்ப நாயக்கன் பட்டியில் கலெக்டரால் திறந்து வைக்கப்பட்ட பள்ளிக்கு பிரார்த்தனைக் கீதம் பாட **uniform dress**ல் **special bus**ல் சென்றார்கள். சுகாதார நாள் கொண்டாட்டத்திற்குச் சென்று நம் மாணவிகள் பங்கெடுத்துக் கொண்டதுமன்றி பள்ளிக்குப் பெருமையுண்டாகும்படி "உணவும் சுகாதாரமும்" என்னும் தலைப்பில் குமாரி **Renganayagi** பேசி மலர் மாலையைப் பரிசாகப் பெற்று வந்தாள். அது வெறும் ரோஜா மலர் மாலையாக மட்டுமல்லாமல் அவளுடைய திறமைக்கும் வெற்றிக்கும் அடையாளமாக எண்ணி மகிழ்ந்தனர்.

சுதந்திர தின விழா பல வகைகளிலும் மாணவிகளுக்கு மகிழ்ச்சி தந்தது. பலர் 4 நாட்கள் லீவில் வீடு சென்றனர். **C. M. S. High School Ground**ல் நடந்த **Play festival**க்கு நம் மாணவிகளும் சென்று களித்தனர். **Rev. Mother Superior C. M. S. High School**ல் கொடியேற்றி வைத்தார்கள். மறு நாள் நம் நாட்டின் சுதந்திர நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடந்த பேச்சுப் போட்டியில் **Secondary Grade Senior Glory** முதல் பரிசும், **Higher Grade Senior Rita** 2வது பரிசும் பெற்றனர். அவர்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள். நம் பழைய மாணவி **Smt. Ragupathi (Secondary Grade** '48 - '50), மதுரையில் இந்திய சுதந்திரப் போராட்டத்தைப் பற்றிய கல்லூரி மாணவிகளுக்கான எழுத்துப் போட்டியில் முதல் பரிசு பெற்ற செய்தி சமீபத்தில் கிடைக்கப் பெற்றோம். நம் பள்ளியின் பெயரை, பெருமையை நிலைநிறுத்தியதற்காக எங்களுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள்.

நம் பள்ளிக்கு வந்த பார்வையாளர்களில் இராமநாதபுரம் ஜில்லா கலெக்டர் **C. V. R. Panikkar** ஒருவர். **Vellore Bishop S. David Marianayagam** அவர்களது வரவால் கௌரவிக்கப் பட்டோம். அவர் கோவிலிற் பாடற் பூசை நடத்தினார். **High School** விஷயமாக வந்த புது **Inspectress Smt. Duraiswami M. A., M. Sc., B. T., June**ல் நம் பள்ளிக்கும் வந்திருந்தார்.

nspection

October மாதம் நடந்தது. குமாரி **M. P. Kousalya Amma** அவர்கள் மிகவும் திருப்தியடைந்து அவர்கள் வட்டாரத்திலேயே சிறந்த பள்ளி என்றும் சிறப்பாக **Higher Grade** மாணவரின் அனுபவ வேலையை மிகவும் புகழ்ந்து எழுதியுள்ளார்கள்.

கொண்டாட்டங்கள்

Sr. Borgia நாகர்கோவில் **St. Joseph's Convent**ல் நித்திய வார்த்தைப்பாடு கொடுத்தார்கள். அதை நம் மாணவிகள் இங்கு **Saint Maria Goretti**யின் வரலாற்றை நடித்துக் கொண்டாடினார்கள். மார்ச்சு 28-ல் **Seniors**க்கு பிரிவுபசாரம் கொடுக்கப்பட்டது. மாணவிகள் "**Aurangazeb and Razaac**" என்னும் நாடகத்தை சிறப்பாக நடித்தனர்.

கண்காட்சி

நம் ஞானோபதேசக் கண்காட்சியை திருச்சி குருமடத்தைச் சேர்ந்த, சங்கைக்குரிய லோஸே சுவாமியவர்கள் திறந்து வைத்தார்கள். பொதுக் கண்காட்சியை இவ்வூர் கமிஷனர் **Sri. J. Subbiah** அவர்கள் திறந்து வைத்தார். கண்காட்சி நான்கு நாட்களிருந்தது. 4000க்கு மேற்பட்டவர் வந்து பார்த்துச் சென்றனர். முக்கியமாக **Social Studies**ல் விவசாயம் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. அணைக்கட்டு, உலகப்படத்தில் இயற்கைப் பிரதேசங்கள், **C. T.**யில் சாலை விதிகள், **R. S. P.**யில் மாடல் கிராமம் எல்லோரையும் கவர்ந்தது.

இலக்கிய விவாதக் கழகம்

ராஜபாளையம் **Sri. Nallakuthalam pillai**, இந்த ஊர் சுகாதார அதிகாரி **Sri. Vettivel**, ராஜபாளையம் **Sri. C. P. Chelliah pillai** முதலியோர் சொற்பொழிவு ஆற்றினார்கள். **Gemini Studio**விலிருந்து **Sri. D. Dharmalingam** அவர்கள் வந்திருந்து பல நாடக நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டினார்கள். மாதாந்திரக் கூட்டங்களுக்கு **Seniors** தலைமை வகிக்கின்றனர். பேசுவதில், நடிப்பதில், மட்டுமன்றி தலைமை வகிப்பதிலும் பயிற்சியளிக்கப்படுகின்றது.

படக்காட்சியும் ரேடியோவும்

சங்கைக்குரிய **Sama** சுவாமிகள் தவறாமல் ஒவ்வொரு வருடமும் வந்து தன் படங்களை காட்டுகிறார். இந்த வருடம்

அஸ்ஸாம், பிரம்மபுத்திரா, சுகாதாரப் பழக்கங்கள் முதலியவற்றைப் பற்றி படங்கள் காட்டினார்கள். மேலும் சேசுவின் உத்தானம், பாத்திமா மாதாவின் தரிசனம், பாலர் சபையினர் பற்றியும் கலர்ப்படம் காட்டினார்கள். மாணவிகள் அருணா டாக்கீசுக்குச் சென்று மதுரைக் கோவிலைப் பற்றிய படமும், "அலிபாபாவும் நாற்பது திருடர்களும்" பார்த்தனர். ரேடியோ செய்திகளும், பாட்டுக்களும் மாணவிகளுக்கு உபயோகப்படுகிறது.

முக்கியமான செய்திகள்

Very Rev. Mother Gudule இப்பொழுது இந்தியாவில் இருக்கிறார்கள். நம் ராஜ்யத்தில் இன்னும் 6 மாதங்கள் இருப்பார்கள். **Mother Charles** அவர்களுடைய பொன் விழாவைக் கொண்டாடினார்கள். குமாரி **Joan of Arc** (**Secondary Grade** 43—45), **Private** ஆக **B. A.** தேறினார்கள். இன்புளுயன்ஸாவுக்காக நம் பள்ளி மூடப்படவில்லை.

ஆகஸ்ட் மாதம் 17-ந் தேதி **Sr. Antonia** ஒன்றரை மாத சுகவீனத்திற்குப் பின் இறைவனடி சேர்ந்தார்கள். கடந்த இரு வருடங்களாக நம்முடன் இருந்த, இன்னும் நம் மனதிலும், பிள்ளைகள் மனதிலும் உள்ள அவர்கள் பல வருஷங்கள் புதுப்பட்டி **Convent**-ல் உழைத்தவர்கள்.

ஞானோபதேச தினம்

ஆகஸ்டு 25.

ஞானோபதேச விழா ஆகஸ்ட் 25-ம் தேதி சங். சி. ம. விசுவாசம் சுவாமிகளின் தலைமையில் கொண்டாடப்பட்டது. காலை திவ்விய பலி பூசையின் இறுதியில், ஞானோபதேசம் கற்று, மற்றவர்களுக்கும் கற்பிக்க வேண்டியதின் அவசியம் பற்றி சங். சுவாமிகள் இனியதோர் பிரசங்கம் ஆற்றினார்கள். அதன் சாராம்சமாவது, நம் நாட்டில் குருட்டாட்டங்கள் மலிந்திருப்பதின் காரணம் கடவுளையும் அவர் அன்பையும் அறியாமையாகும். அர்ச். பத்தாம் பத்திநாதர் பாப்பரசரவர்கள் இதைப் போக்கும் மருந்து ஞானோபதேசம்தான் என்று யாவருக்கும் தம் சுற்று அறிக்கை மூலம் வலியுறுத்தியதோடு, ரோமை நகர்ச் சிறுவர்களை வத்திக்கான் அரண்மனைக்கு வரவழைத்து தாமே அவர்களுக்கு ஞானோபதேசம் கற்பித்தார்கள் எனில் அதன் முக்கியத்துவம் எவ்வளவு ஆகும்! கடவுளை — நம் உள்ளத்தைக் கடந்தவராகிய பரம்பொருளை அறியவேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும். எனவே கத்தோலிக்கர் அவரை மற்றவர்களும் அறியச் செய்ய முன் வரவேண்டும்.

காலை 8-45 மணிக்கு மாடியறையில் யாவரும் குழுமி இருக்க, கண் தெரியாத பிள்ளைகள் மாதாவின் பேரில் பாடிய "ஜெய்மா மரியம்" என்ற சமஸ்கிருத வணக்க கீதத்துடன் கூட்டம் ஆரம்பமாகியது. குமாரி **T. A.** சலேத் சங். சுவாமிகளுக்கு வரவேற்புரை கூற குமாரி தனபதி சென்ற ஆண்டு அறிக்கை வாசித்தார். மதுரை அதிமேற்றிராணியார், மிக. வந். லெயோனார்டு சே. ச., ஆண்டவர் அவர்களிடமிருந்து வந்த ஆசிக் கடிதத்தை பிரின்ஸிப்பால் வாசித்தார்கள்.

பின் குமாரி ஜோனு 6-ம் வகுப்பு மாணவிகளுக்கு தேவதாயின் அமலோற்பவம் பற்றிய மாதிரிப் பாடம் நடத்திக் காண்பித்தார். மாதா அர்ச். பெர்நதத்தம்மாளுக்குக் காட்சியளித்தது, "நாமே அமலோற்பவம்" என்று தன்னை வெளிப்படுத்தியது ஆகிய வரலாற்றைக் கேள்விகள் மூலம் மாணவிகளிடமிருந்து வரவழைத்து, அமல+உற்பவம் என்பது என்ன என்று விளக்கினார். 'நாமே அமலோற்பவம்' என்ற பதம் எப்படி மாதா ஒருவருக்கே அந்த விசேஷ வரம் கிடைத்தது என்று காட்டுகிறது; ஆதாம், ஏவாளின் பாவத்தால் அவர்கள்



Newmanists who attended the lecture given by
Rev. Father E. Ugarte S.J.



Our Newman Association—March 1957
with **Rev. Father C. Montaud S.J.** Parish Priest

இழந்த விசேஷ வரங்கள், அவர்கள் சந்ததியார் ஜென்மப் பாவத்தோடு தோன்றுவது, சிங்காரத் தோப்பிலேயே கடவுள் மாதாவைப் பற்றி முன்னறிவித்தது, முதலியவற்றை மாணவி களின் நினைவுக்குக் கொண்டு வந்து, கடவுளின் தாயாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றதாலேயே மாதா ஜென்மப்பாவமின்றி உற்பவித்தார்களென்றும், தம் திருக்குமாரனுடைய பாடுகளின் பலனைக் கொண்டு தேவமாதா முன்னதாக மீட்கப்பட்டார்கள் என்றும் மாணவிகள் மனதில் நன்கு பதியச் செய்தார். குமாரி தெரஸ் பெர்னண்டோ மாணவிகள் அமலோற்பவ மாதாவின் பேரில் பாடிக் கும்மியடித்தனர்.

சங். சுவாமிகள் தலைமையுரையில், சிரமமான பாடத்தை நன்கு கையாண்ட ஆசிரியையைப் பாராட்டினார்கள். ஒரு ஆசிரி யைக்கு மிகவும் தேவையான குணம் தன் மாணவிகளின் அறிவு நிலையில் தன்னை வைத்து அதற்கேற்ப கற்பிப்பதாகும். தாய் மார்களின் பொறுப்பு மகத்தானதாகும். எதிர்காலத்தையே நிர்ணயிக்கும் சக்தி அவர்களிடம் இருக்கிறது. அதனை உணர்ந்து பாலப் பருவத்திலேயே தம் குழந்தைகளுக்கு ஞான உபதேசம் கற்பித்து நல் வழியில் நடப்பிக்க வேண்டும். பள்ளி யில் ஆசிரியைகள்தான் தாயின் ஸ்தானத்திலிருக்கின்றனர். எனவே அவர்களும் தம் பொறுப்பு உணர்ந்து நடக்க வேண்டு மென்று எடுத்துக் காட்டினார். சமீபத்தில் அமெரிக்கா சென்று திரும்பிய சங். சுவாமிகள், அத்தேசத்தில் கத்தோலிக்கரின் வாழ்க்கை மற்றவர்க்கு ஓர் எடுத்துக்காட்டாகவே விளங்கு கிறது. கத்தோலிக்கப் பெற்றோர் வீட்டில் குழந்தைகளை நல் வழியில் நடத்த பெரும் பிரயாசை எடுப்பதாலாயே அவர்கள் வேத விசுவாசத்தில் சிறந்து விளங்குகின்றனர் என்று கூறினார் கள். சிறு வயதில் கற்றது என்றும் மனதில் அழியாமல் பதிந் திருக்கும். அன்னை மோர் கடையும்போது வெண்ணெய்க்காகச் சுற்றி வரும் சிறு மகனுக்கு, வேத சத்தியங்களையும் அர்ச்சிய சிஷ்டவர்களின் சரித்திரங்களையும் எடுத்துக் கூறியது, தான் கற்ற அரிய பெரிய வேத சாஸ்திரங்களையும்விட தன் மனதில் பதிந்து இன்னல்கள் பல உற்ற வேளையிலும் தனக்கு உறுதுணை யாக நின்றன என்று சுவாமிகள் அனுபவப்பூர்வமாகக் கூறி னார்கள். என்னே தாயின் சக்தி!

குமாரி **T. A.** சலேத் நன்றி நவில பாப்பாசர் கீதத்துடன் விழா முடிவுற்றது.

ஜேன் லூயிஸ்

கண்காட்சியில் எம் கிராமம்

"டேய்! திரு இருதயப் போதனுமுறைப் பள்ளியில் ஓர் அழகான கிராமம் இருக்கிறதாம். போவோம் வருகிருயா?"

"என்ன? பள்ளியில் கிராமமா? மாயா பஜார் பார்த்த மயக்கமா? அல்லது......?"

"இல்லையடா இல்லை, கண்காட்சிசாலையில் மாதிரி கிராமம் அமைத்து வைத்திருக்கிருர்களாம். பெயர் **அமுதூராம்** அதைப் பார்க்கலாமா என்று கேட்டால்......"

"ஓகோ! சரிதான் வா, வா, போகலாம்......"

இந்தப் பேச்சு நிச்சயமாய் நம் வாசகர்களைக் கண்காட்சி சாலைக்கு, அதிலும் எம். மாதிரி கிராமத்திற்கு அழைத்துச் செல்லும் என்பதில் சந்தேகமில்லை. ஆமாம்! அதோ பாருங்கள் எம் கிராமத்தை!

குழந்தைகள்தான் எத்தனை இன்பத்தோடு பள்ளிக்கு ஓடுகிருர்கள்! மாதர்கள்தான் எத்தனை விரைவாய் போகிருர்கள். மாதர்களா? எங்கே போகிருர்கள் அத்தனை விரைவாய்? வியக்க வேண்டாம்! மாதர் நல இலாகாவிற்குத்தான். அடடே! பாட்டனும் பாட்டியுங்கூடவா? எனக் கேட்கத் தோன்றுகிறதோ? இல்லையில்லை. அவர்கள் தம் பேரன் பேத்திமார்களுக்குப் பணம் சேர்க்கக் கூட்டுறவு க்ஷேம நிதி நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். ஏ! அப்பா! எவ்வளவு பெரிய கூட்டுறவுப் பண்டகசாலை! எத்தனை அழகான கோவில்! எவ்வளவு ஆரோக்கிய வசதியுள்ள மருத்துவசாலை!

அடேடே! தாகமெடுக்கிறதா? அதோ! தெருவிற்குத் தெரு குழாய். சுத்தமான நீரை வேண்டிய அளவு பருகலாம்,

களைப்பாய் இருந்தால் அதோ தெரிகிறதே அந்தச் சத்திரத்திலே தங்கலாம். வாருங்கள். "பரவாயில்லையே, இக்கிராமம் எல்லா வசதியும் உண்டு போலும்" எனச் சொல்லுகிறீர்களா ?

ஆம். எம் அமுதூரை அழகிற்காக அமைக்கவில்லை. அரிய கருத்துக்களுக்காக ஆக்கினோம். யாம் கல்வி நோக்கிற்காகச் சென்ற கிராமத்தில் பற்பல குறைகள் கண்டோம். குறைகளை நிவர்த்திக்க வழிகளை ஆராய்ந்தோம். ஆராய்ந்ததை செயலிலே அமைத்தோம். அச்செயலே, முன்னேற்றம் பொருந்திய, எடுத்துக்காட்டாக உள்ள ஓர் மாதிரி கிராமமாக உருப்பெற்றது.

இதனை ஆக்கியமுறை இருக்கின்றதே ! ஏ ! அப்பா ! எவ்வளவு உற்சாகத்துடன் வேலை நடந்தது தெரியுமா ? கிறிஸ்துமஸ் விடுமுறையின்போதே வீட்டு வேலையாகக் கொடுக்கப்பட்டது. நான்கு குழுவினராகப் பிரிந்தோம். ஒவ்வொரு பிரிவும் முறையே ஓட்டு வீடு, மாடி வீடு, காரை வீடு, கூரை வீடெனப் பல ரகங்கள் செய்து வந்தோம். கைதேர்ந்த சில மாணவிகள் பள்ளிக்கூடம், பண்டகசாலை, மருத்துவசாலை, பஞ்சாயத்துப் போர்டு போன்ற சில முக்கிய இடங்களை செய்து வந்தனர், வெகு நேர்த்தியாய். வீடுகளிலே வேண்டியன எல்லாம் பொறுக்கப்பட்டன, எம் ஆசிரியர் அவர்களால். இல்லாதவையெல்லாம் ஜரூராகச் செய்யப்பட்டன எம்மால்.

காரியத்திலே கண்ணாக இருந்துகொண்டு நாங்கள் ஆடிய ஆட்டம்தான் எத்தனை ! எம் ஆசிரியர் அவர்களது அறையை எம் அறையாகப் பாவித்து யாம் செலுத்திய அரசாட்சியும், அனுபவித்த இன்பமும் கொள்ளை ! கொள்ளை ! ஆசிரியரைக் கண்டவுடன் 'இந்தப் பூனையும் பால் குடிக்குமா' என இருந்து நாங்கள் நடித்த நடிப்பின் சாமர்த்தியம் பலே ! பலே ! !

கடைசி நிமிடம் வரையிலும் எல்லாவற்றையும் செய்து பெப்ருவரி மாதம் 9-ம் தேதியன்று பொருத்தமான இடத்தில் பொருத்தமானதை வைத்தோம். மருத்துவசாலையை அமைதியான இடத்தில் அமைத்தோம். கூட்டுறவுப் பண்டகசாலையை

வியாபார ஸ்தலத்தின் அருகில் அமைத்தோம். பள்ளியை ஒதுக்குப் புறத்திலே கட்டினேம். ஆங்காங்கே மரங்களை நட்டினேம். பாதைகளை உருவாக்கினேம். முடிந்தது ஒரு வகையாய்!

ஜனங்கள் திரண்டு வந்து அழகை வியந்தனர். அரிய கருத்துக்களைப் புகழ்ந்ததோடு ஒரு சில திருத்தங்களும் கூறினர். எங்களுக்குப் பெருமை மட்டுமா கிட்டியது? படிக்க ஆவல் பிறந்தது. பரீட்சைக்குப் புதிய தெம்பு கிடைத்தது. நமக்குக்கூட இவ்வளவு சக்தி உள்ளதா வெனத் தன்னம்பிக்கை எழுந்தது. மக்களுக்கும் நாம் சிறிதளவு அறிவூட்டியுள்ளோம் எனக் கருதியதோடு நாங்களும் பல விஷயங்கள் தெரிந்து கொள்ள வழி வகுத்தது.

கிறிஸ்துவக் கோவிலே அப்படியே அழகே உருவாக ஆக்கித் தந்த அருமை மிக்காரையும், உள்ளம் குளிர், நிழல் தரு மரங்களை உருவாக்கித் தந்த இனிமை மிக்காரையும், வெகு தூரத்தில் வசித்தாலும் மருத்துவசாலையை அனுப்பித் தந்த விசுவாசம் மிகுந்தாரையும் இந்த இடத்தில் நினைப்பது நன்றி மிகுந்த செயலாகும். ஓங்குக அன்னர் உயர் குணங்கள்!!

எம் அமுதூரை நினைத்தால் சதா அமுதம் வழிந்து கொண்டிருக்கும் 'அமுதசுரபி' ஞாபகத்திற்கு வருகிறது.

வாழ்க எம் அமுதூர்!
வளர்க எம் பாடம்!!

Ele. Seniors

எங்கள் வீட்டில்!

ஓர் ஞாயிறு. எங்கள் வீட்டில் பகல் சமையல் பிந்திவிட்டது. ஆகவே எங்கள் அப்பா எல்லோரையும் பார்த்து, "ஜெபம் செய்யுங்கள். (அசனத்திற்கு முன் ஜெபம்) அதற்குள் சாப்பாடு தயாராகிவிடும்" என்றூர்கள். ஆனல் என் இளைய தம்பி, "வயிற்றிற்குள் ஒன்றுமே இல்லை. வயிறு பசிக்கிறது" என்றுன். என் மூத்த தம்பி எல்லோரையும் அழைத்துக் கொண்டு அறைக்குள் போனன். எங்கள் அப்பா பட்டாளத்தில் இருந்த போது உபயோகித்த தொப்பி, கைமேசையும், என்னுடைய பாவாடை, ரிபனையும், ஒரு போர்வை இவ்வளவையும் எடுத்துக் கொண்டு திண்ணைக்குப் போய், சுவாமியாரைப்போல் உடுத்திக் கொண்டு, எல்லோரையும் உட்காரச் சொல்லிவிட்டு இளைய தம்பியைப் பார்த்து, "அடே நீ வயிற்றுக்குள் சிறுகுடல், இரைப்பை எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு வயிற்றுக் குள் ஒன்றுமில்லை, பசிக்கிறது', என்று பொய் சொன்னதினல், இப்பொழுது என்னிடம் பாவசங்கீர்த்தனம் செய்" என்றுன். உடனே கட்டில் பாவசங்கீர்த்தனத் தொட்டியாக மாறியது. பாவசங்கீர்த்தனம் செய்தான். யாருக்குத் தெரியும்? பாவ சங்கீர்த்தனத்திலும் வயிறு பசிக்கிறது என்றுதான் சொல்லி யிருப்பான். பாவசங்கீர்த்தன இரகசியத்தை வெளியிடுவாரோ சுவாமியார்! சங்கீர்த்தனத்தின் பின் சங். சுவாமியார் எழுந் திருந்து தொப்பியைக் கழற்றிவிட்டுக் கீழ்க்கண்டவாறு பிரசங் கம் செய்தார்.

பிரிய தம்பிமார்களே! நான் ஒரு கதை சொல்லுகிறேன். (அதற்குள் என் தங்கை, "அண்ணன் என்னை மட்டும் பிரிய தங்கையே என்று சொல்லவில்லை" என்று கடைக்கு ஓடிவிட் டாள்.) ஓர் நாள் சேசுநாதர் 12 அப்போஸ்தலர்களோடு உலா வச் சென்றூர். அப்பொழுது அவருக்குப் பசித்தது. இராயப் பரைப் பார்த்து, பக்கத்திலுள்ள ஒரு கிழவியிடம் போய் 12 அப்பங்கள் வாங்கிவரச் சொன்னூர். அப்படியே இராயப்பரும் கிழவியிடம் போனூர். கிழவி 13 அப்பங்கள் கொடுத்தாள். இரா யப்பர் ஒரு அப்பத்தைக் கைக்கிடையில் ஒளித்து வைத்துக் கொண்டார். மீதி 12 அப்பங்களையும் 12 பேருமாகப் பங்கிட் டுச் சாப்பிட்டனர். இதைப் பார்த்த சேசுநாதர் "இராயப்பா எனக்கு ஒன்றுமில்லையா?" என்று கேட்க, இராயப்பர் "ஆண்ட வரே! நீர் 12 தானே வாங்கச் சொன்னீர்" என்று சொல்லிவிட்

டார். உடனே சேசு " எல்லோரும் ஜெபம் செய்யுங்கள். பிதா எனக்குத் தருவார் " என்று சொல்ல, எல்லோரும் உட்கார்ந்து ஜெபம் செய்தனர். ஜெபம் முடிந்ததும் அப்பம் வரவில்லை. பின் எல்லோரையும் முழங்காலிலிருந்து ஜெபிக்கச் சொன்னார். அப்படியும் வரவில்லை. பின் எல்லோரையும் கையை விரித்து, கண்களை மூடி ஜெபிக்கச் சொன்னார். இராயப்பர் பயந்து கொண்டு கையை மெல்ல விரித்தார். கைக்கிடையிலுள்ள அப்பம் பொத்தென்று விழுந்தது. தன் தோழர் யாரும் தன்னைப் பார்க்கவில்லையென்று இராயப்பர் மன திருப்தி கொண்டார். ஆண்டவர் கடைக் கண்ணால் பார்த்துக்கொண்டிருந்ததை இராயப்பர் பார்த்தாரா? உடனே சேசு " என் பிதா எனக்குத் தந்துவிட்டார் " என்றார்.

" இதே போல் நீங்கள் எல்லோரும் கையை விரித்து ஜெபியுங்கள், சாப்பாடு ரெடி ஆகிவிடும்" என்று சொல்லிக்கொண்டே சாமியார் உடுப்பைக் கழற்றிவிட்டார். அதற்குள்ளாகப் பிரசங்க நேரத்தில் ஓடிப்போன என் தங்கை, " பாவிகளுக்கு அடைக்கலமே, காலணா கடலைமிட்டாய் வாங்கித் தின்னேனே " என்று பாடிக்கொண்டு வீட்டிற்குள் நுழைந்தாள். நாங்கள் மேலே நடந்தவற்றை நினைத்துச் சிரித்து சிரித்துச் சாப்பிட்டதில் சோறு சிரசில் ஏறிவிட்டது என்றால் பொய்யோ !

X. மெர்சி பெர்னாண்டோ
Sec. Gr. 28 / 55 - 57

என்ன?

என்ன? என்ன? இதுவும் ஒரு தலைப்பா?' என்ற பிரமிப்பா? ஒன்றும் இல்லை. ஆசிரியர் அளித்த தலைப்புகளில் என்ன தலைப்பில் என் எண்ணைப் போடுவது என்றிருந்த எனக்குக் கடைசியில் 'என்ன' தான் என் கண்முன் காட்சியளித்தது. எண்ணையும் போட்டுவிட்டு இப்பொழுதோ என்ன எழுதுவது என்று திகைக்கின்றேன். என்ன? எப்படி என் திகைப்பு?

என்ன? வாழ்க்கையில் இதை உபயோகிக்காத நாள் உண்டா? அதுவும் பள்ளி வாழ்க்கையில் இதை உபயோகிக்காத நாழிகை உண்டா? ஆசிரியர் பாடம் கற்பித்துக்கொண்டிருப்பார். இடைக்கிடையே இரஸமான சம்பவங்களை ஒரே வாக்கியத்தில் சுருங்கக் கூறி விளங்க வைப்பார். பாடத்தைக் கவனியாதவர்கள் "என்ன, என்ன?" என்று அடுத்திருக்கும் அன்பர்களைக் கேட்பது இரஸமாக இருக்கும். கடந்த எல்லையில் இருப்பவர்களிடம் கண் சிமிட்டிக் கேட்பது அதைவிட இரஸம்.

சரி. பள்ளி வாழ்வில்தான் இப்படியென்றால் உலக வாழ்க்கையில் என்ன என்று பார்ப்போம். குழந்தை பிறக்கிறது. அண்டை அயலார் முதலில் கேட்கும் கேள்வி என்ன? "என்ன குழந்தை"— இதில் 'என்ன' என்பதில்தான் எத்தனை பொருள் அடங்கியிருக்கிறது! குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்கிறது. தாயிடம் சேய் தன் யாழினுமினிய மழலை மொழியால் முதலில் கேட்கும் கேள்வி — 'என்ன?' தாயும் தளராது பதில் கூறுகிறாள். பள்ளியில் பிள்ளையைச் சேர்க்க வேண்டுமென்றால் படிப்பறிவற்ற தாய் எத்தனை 'என்ன'களை பொறுமையோடு சகித்து பதில் கூறவேண்டியதிருக்கிறது. 'என்ன'வின் மகிமைதான் என்னே!

மணவாழ்க்கையில் நுழையுமுன் பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டாரிடமும், மாப்பிள்ளை வீட்டார் பெண்வீட்டாரிடமும் கேட்கும் கேள்விகள் தான் என்ன? சிந்தித்துப்


பாருங்கள் சற்று. கோவிலில் துக்க மணி அடிக்கிறது. எண்ணற்றவர்கள் மனதில் "என்ன, என்ன ?" என்ற கேள்வி என்ன சீக்கிரத்தில் எழுகின்றன. ஆகவே, கருவாகிய கணம் முதல் காலன் கௌவும் வரை 'என்ன ?' மயம் !

என்ன ? இது வெறும் பயனற்ற 'என்ன' தானு ? இல்லை. விஞ்ஞானியை விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபடுத்துவது என்ன ? இலக்கிய நிபுணர்களை இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபடுத்துவது என்ன ? மனநூல் வல்லுணர்களை மனநூல் ஆராய்ச்சியில் ஈடுபடுத்துவது என்ன ? "பெரிது பெரிது புவனம் பெரிது", என்ற பொய்யாமொழியையும் பொய்ப்பித்தது என்ன ? ஆராய்ச்சிக் காரணம் என்ன ? அதில் வெற்றி பெறுங்கால் ஆனந்தத்திற்குக் காரணம் என்ன ? 'என்ன' புரியும் திருவிளையாடல்கள்தான் என்னே !

கலைக்குக் காரணம் என்ன ? அழகைக் கண்டு 'என்ன அழகு !' என்று இரஸிக்கிருன் கலைஞன். அதைச் சித்திரமாகவும் சிற்பமாகவும் சித்தரிக்கிருன் கலைஞன். கற்பனைக்குக் காரணமும் 'என்ன' சிந்தனையைத் தூண்டுவதும் 'என்ன'. கல்விக்குக் காரணமும் 'என்ன'. எத்தனை உணர்ச்சிகளை 'என்ன' அளிக்கிறது.

தற்கால வீரமுரசம் வீதியில் ஒலிக்கும் ஓசை கேட்டு வீரிட்டு ஓடுகின்றனர் நம் பாரத வீரக் குழந்தைகள். எங்கே ? போருக்கா ? இல்லை. "என்ன சினிமா, என்ன நாடகம்?" என்று அறியத்தான். வீதியில் ஒரு கூட்டம். என்ன என்று அறிய ஆவல். ஒருவரையொருவர் 'என்ன ?' என்று கேட்கின்றனர். ஒரு சிறு விஷயம் கைகால்களுடன் காட்டுத்தீ போல் பரவுகிறது. இவ்வாறே வாழ்க்கை வீதியில் சஞ்சாரம் செய்யும் மானிடருக்கு எண்ணற்ற 'என்ன' தோன்றி ஆட்டி வைக்கிறது அவனியை. 'என்ன' விற்குத் தான் எத்தனை சக்தி ! !

P. N. கமலா
Sec. Gr. 40 / 52 - 54.



Our Exhibition
Feb. 1957.



Christmas



A Model
Village

பழமையும் புதுமையும்

பழமையின் மூப்பையும், புதுமையின் யௌவனத்தையும் ஆய்ந்து சிந்திக்குங்கால், இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று எதிர் மாமுனவையா? அல்லது ஒன்றை யொன்று தழுவியவையா? அல்லது ஒன்றிலிருந்து ஒன்று தோன்றியவையா? என்ற வினுக்கள் எழுகின்றன. முடிவில் அஃது எல்லா வினுக் களுக்குமே ஏற்ற ஒன்று என்றே தீர்மானிக்கலாம்.

பழமையானது முதிர்ந்து இயற்கையினுல் ஏற்படும் காலக் கோட்டுகளின் வரைகள் பெற்று, அழகிழந்து, தளர்ச்சி யுற்று, பொதுமக்களின் மதிப்பை இழந்துவர, நாளடைவில், புதுமையானது, இளமை பெற்று, செழுமை மிகுந்து, புது வனப்பும், கவர்ச்சியும் உடையதாய்ப் பொது மக்களின் மதிப் ஸ்பப் பெற்று வருவதை நாம் காண்கிறேம். எனினும் பழமை யின்றிப் புதுமை தோன்றுவதும் இல்லே; நிலேத்து நிற்பதும் இல்லே.

ஒரு சில மக்களிடையே, புதுமை உணர்ச்சி, அளவுக்கு மீறி தலே தூக்கி நிற்கலாம். அன்னுர் தம் பேதமை என்னே! இது முற்றிய ஓலேயைப் பார்த்து, குருத்தோலே நகைத்ததை ஒக்கும். பளபளப்பும், மென்மையும், கவர்ச்சியும் பொருந்திய குருத்தோலே, தானும் ஒரு காலத்தில் பழுத்து மென்மை இழந்து முரடான முற்றின ஓலேயாக மாறத்தான் வேண்டும் என்பதை அறியாத தன்மையை ஒக்கும்.

புதுமையின் கவர்ச்சியில் சிக்கி மயங்கிய புதுமைத் தோழிகள், தம்மை ஈன்றெடுத்த பெற்ருேரும் பழமை எய்தி னர் என அவரை வெறுப்பரோ? அன்னுர் பிறந்த ஊரும், ஜெனித்த நாடும் பழமை பெற்றனவே. அவற்றையும் ஒதுக்கு வரோ? அவர் வதியும் இப்புவியும், வாயுமண்டலங்களும், மிகப் பழமையானவையே.

புதுமையை முழுவதும் தள்ளிவிடச் சொல்லவில்லை. ஆனால் அதன் வயத்திலேயே நம் மனதைப் பறிகொடுத்தால், நம்மை அது எவ்வழி இட்டுச் செல்லும் என ஆராய்ந்தறிந்து கொள்வதே யுக்தி.

பழமை என்றதும் மாட்சியுடன் கண்முன் நிற்பது நம் பழைய பாடசாலை. தொழில் முறைப் பயிற்சிக்காக, இளம் பெண்கள் பலர், ஓரீராண்டு காலம், கூடிப் பழகிக் கல்வி கற்று, தேறிய அறிவும், சீரிய ஞானமும், கடமை உணர்ச்சியும் கொண்டு, வாழ்வில் பிரிவை உண்டாக்கிய நம் பழம் பள்ளியை மறக்க முடியுமா? அப்பழைய காலத்தை நினைக்குந்தோறும், சொல்லால் விளக்க முடியாத ஓர் இன்பம் பெருக்கெடுத்தோடு கின்றது. பழமை மறவாப் பண்புமிக்க நம் ஆசிரியர்கள் அப் பழமையைப் புதுப்பிப்பான் காரணமாய், பற்பல புதிய முறை களைக் கையாடுகின்றனர். அன்னவரது புதுமை கலந்த பழமை யின் அழகைக் காண, பள்ளியில் வருடா வருடம் கண்காட்சி, பழைய மாணவர் கூட்டம் வாய்ப்பு அளிக்கிறது. நமக்கெல் லாம் சிறகுகள் இருப்பின், ககன மார்க்கமாய்க் கணத்திற் பறந்து சென்றுவிடக்கூடிய ஆர்வம் நமக்கு உண்டு. எனினும், வசதி வேண்டுமே.

நாம் படித்த அப்பழங்கால நினைவுகள் நித்த நித்தம் புதுமை பெற்று, நம் உள்ளங்களில் ஓங்கி வளர்க. நமது பழமை மிக்க திரு இருதய போதனுமுறைப் பள்ளி, புத்தம் புது முறை களையும், திட்டங்களையும் கொண்டு, புத்துயிருடன் மிளிரவும், அதன் மடியிலே வளர்ந்த நாமும் நம் வாழ்க்கையில் தெய்வ பக்தி, வீரம், கொடை, சத்தியம் முதலிய உயர் குணங்களை யுடையவர்களாய், பழம் பள்ளியின் புகழைப் பரப்பி, இருதிறத் தும் இணையிலா மேன்மை எய்தவும், எல்லாம் வல்ல இறைவன் பழம்பொருள்நாதன் இன்னருள் புரிவானுக.

ஐடா சுசீலாபாய்
எண். 1 (46 - 48)

EVER READY

SACRED-HEART TRAINING-SCHOOL SRIVILLIPUTTUR